ஊடக அறிவித்தல் இல. 13

தேர்தல் ஆணைக்குழு

ஊடக அறிவித்தல்

01. தேருநர் இடாப்பு மீளாய்வு

2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி அதனை அத்தாட்சிப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

அந்த அடிப்படையில்,

- 2022 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் அதேபோல் உட்சேர்க்கப்படும் பெயர்கள் அடங்கிய நிரல்களைக் காட்சிப்படுத்தல் - 2022.06.15 முதல் 2022.07.12 வரை.
- உரிமைக்கோரிக்கைகளையும் ஆட்சேபனைகளையும் சமர்ப்பித்தல் - 2022.06.15 முதல் 2022.07.12 வரை.
- 2022 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் - 2022.10.31

தேர்தலொன்றின் போது நடப்பு ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்படும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்படாத ஆளெவருக்கும் வாக்களிப்பதற்கு உரித்துக் கிடைக்காதென்பதால், தாம் வதியும் பிரதேசத்தின் கிராம அலுவலரைச் சந்தித்து தேருநர் இடாப்பில் பதிவை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கோருகிறது. இது தொடர்பான விசாரணைகள் ஏதுமிருப்பின், வதியும் மாவட்டத்தின் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து விளக்கங்களைப் பெறுமாறும் மேலும் கோரப்படுகிறது.

02. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிச் செயலாளர்களுடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்

2022 தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தலும், அரசியல் கட்சிகளின் நியதிச்சட்ட ஆவணங்களும் நாட்டில் தற்போது உருவாகியுள்ள சமூக, அரசியல் நிலைமையும் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிச் செயலாளர்களுடன் ஒரு கலந்துரையாடலை 2022 யூன் மாதம் 06 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

எச்.எம்.ரி.டீ.ஹேரத்
செயலாளர்
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2022 மே மாதம் 27 ஆம் திகதி